# இசையினூடான பண்பாட்டு அடையாளம்
## தமிழ்ச்சமூகத்தினை அடிப்படையாகக்கொண்ட ஓர் பண்பாட்டு இசையியலாய்வு

முனைவர் திருமதி சுகன்யா அரவிந்தன்

அறிமுகம்.

இசை என்பது ஒரு அற்புதமான கலை. இறைவனால் மானிடர்க்கு அளிக்கப்பட்ட மகோன்னதமான பரிசு.

கலைகள் சமூகத்தின் தனித்துவம் காக்கும் மூலகங்கள். எந்தக்கலையும் தான்வாழுகின்ற சமூகத்தின் இரத்த நாளங்கள் போலவே செயல்படுகின்றன. இவற்றுள் குறிப்பாக கிராமியக்கலைகள், தான் வாழுகின்ற பண்பாட்டின் முத்திரைகளாக விளங்குகின்றன என்றால் மிகையாகாது.

'ஒரு இனத்தின் அல்லது நாட்டின் பண்பாட்டை, பழக்கவழக்கங்களை, வரலாற்றை, நாட்டுநடப்பை, உண்மையான முறையிலே படம் பிடித்துக்காட்டுவனவே நாட்டுப்புறவியலாகும். மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதைக் கற்றதோ, எதைப் பயிற்சி பெற்றதோ இவற்றைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையே இது' என்று நாட்டுப்புறவியலாய்வாளர்கள் கருதுகின்றனர்.1 கிராமியக்கலை வடிவங்களிலே முக்கிய இடம் பெறுவது கிராமியப் பாடல்கள். நாட்டுப்புறக்கலைகள் எந்த மண்ணில் தோற்றம் பெறுகின்றனவோ அந்த மண்ணின் மணம், தன்மை, பேச்சு, மொழி போன்றவற்றின் பிரதிகளாக விளங்குகின்றன. மேலும் மக்கள் பயன்படுத்துகின்ற சொற்றொடர்களும் பதப்பயன்பாட்டு வழக்கங்களும் இவற்றில் பயின்று வரும். மேலும் வரலாற்றுப் பண்பாட்டுச் செய்திகளைக் கூறுவதுடன் உண்மை நிலையைத் தெளிவாக்கும் பண்பு கொண்டது.

இந்தக்கிராமிய இசை வடிவங்களில் குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் யாவும் மானிடவியல், சமூகவியல், மொழியியல் போன்றவற்றின் வேர்களை இனங்கண்டு கொள்ள முடிகின்றது. அதிலும் குறிப்பாக நாட்டுப்புறப்பாடல்வகைகளில் குறிப்பாக தாலாட்டு மற்றும் ஒப்பாரி ஆகிய இரண்டு பாடல் வகைகளும் பெண்களை மையமாகக் கொண்டு அமையப்பெற்றது.

பெண்களை மையப்படுத்தி குடும்பத்தின் நிலைபேற்றிற்காக உழைப்பவர்களது உள்ளக்கிடக்கைகளின் வடிகாலாக இப்பாடல் வகைகள் வழக்கிலிருந்திருக்கின்றன என்றால் மிகையாகாது.

ஆனால் சமகாலத்திலே கிராமிய இலக்கியத்தளங்கள் வெறுமனே ஆய்வுப்பொருளாகிப்போய்விட்டநிலையிலே சமூகத்தின் கண்ணாடிகளாக இருந்து, இன்று வாழ்வியல் ஓட்டத்திலே மறக்கடிக்கப்பட்டுவிட்ட இந்தகிராமியக்கலைவடிவங்களை

விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

குறிப்பாக கிராமியப்பாடல் வகைகளின் சமூக இருப்பின் முக்கியத்துவத்தினை எடுத்தாராய்வதாக இக்கட்டுரை முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த வகையிலே சமகால ஓட்டத்திலுள்ள தமிழ்ச்சமூகத்தின் தனித்துவ அடையாளங்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கான முயற்சிகள் பல ஆங்காங்கே தமிழ்ப்பற்றாளர்களாலும் கற்றறிந்த சான்றோர்களாலும் முன்னெடுப்புக்கப்பட்டு வருகின்ற இந்நிலையிலே இசை வழியாக தமிழ் மொழி மற்றும் தமிழ்ப்பண்பாடானது எதிர்கொள்கின்ற சவால்களை எவ்வாறு சாதனைகளாக்க முடியும் என்று இந்தக்கட்டுரை நோக்குவதாக அமைகின்றது.

### திறவுச்சொற்கள்

நாட்டார் பாடல்கள் , பண்பாட்டடையாளம், தனித்துவம், பண்பாட்டுக்கையளிப்பு, மரபு.

### நோக்கம்

ஆரம்பகாலங்களிலே தமிழ்ப்பண்பாடு சார் பெண்களால் பாடப்பட்டு வந்த தாலாட்டுப்பாடல் மற்றும் ஒப்பாரிப்பாடல்கள் இன்று இருந்த இடம் தெரியாமல் வெறுமனே புத்தகங்களிலும் ஆய்வுகளிலும் மட்டுமே இன்று சிலரால் மாத்திரமே பேசப்பட்டு வரும் ஒரு பாடல் வடிவமாக மாற்றம் பெற்றிருப்பது மிகவும் கவலை தரும் விடயமாகும்.

இதற்கு நகரமயமாக்கம் விரைவில் நிகழ்தல், பண்பாட்டுக்கலப்பு, தொலைக்காட்சி, சினிமா போன்ற ஊடகங்களின் தாக்கங்களின் வேகத்தைப் பொறுத்து தாலாட்டு, ஒப்பாரி போன்ற நாட்டாரிலக்கியங்கள் சில இடங்களில் வேகமாவும் சில இடங்களில் மெதுவாகவும் மறைந்து வருகின்றன. தமிழிலக்கிய மரபிலே இவ்விரு பாடல் வகைகளும் நாட்டார் இலக்கியமாகக் கொள்ளப்பட்ட போதிலும் கூட இன்று இவை தமிழ்ப்பண்பாட்டு மரபிலே மங்கிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது மிகவும் கவலை தரும் விடயமாகும். தமிழ்ப்பண்பாட்டின் அடையாளங்களாக விளங்குகின்ற இப்பாடல்கள் பற்றிய மீள்வாசிப்பு சமகாலத்திலே மிக முக்கியமான ஒன்றாகக் கொள்ளமுடிகின்றது.2

தமிழ்ப் பண்பாட்டு பரிமாணங்கள் பலவற்றினை இந்தப் பாடல் வகைகள் தம்முள் பொதிந்து வைத்திருந்து, மற்றவர்களுக்கும் கையளிப்புச்செய்துவந்தன. ஆனால் இன்று இந்த நிலைகள் எமது சமூகத்தின் சிதறடிப்புக்களால் மறக்கப்பட்டும், பயன்பாட்டு நிலையிலே இல்லாதொழிந்து போய்விடுகின்ற நிலை தமிழ்ப்பண்பாட்டுப்பரப்பிலே காணமுடிகின்றது. பண்பாட்டின் தனித்துவம் காத்துநின்ற இந்தப்பாடல்களை அழிந்து விடாமல் பாதுகாத்து, அடுத்த சந்ததிக்குக்கையளிப்புச்செய்வேண்டிய தேவை சமகாலத்திலே எழுந்துள்ளது.

கிராமியக் கலைவடிவங்களின் இந்த நிலை மாற்றம்பெறவேண்டும். எமது பண்பாட்டுப்பாரம்பரியங்களை காலத்திற்குக் காலம் நாம் பதிவுசெய்து வைத்திருப்பதும், அடுத்த சந்ததிக்கு இது பற்றிய தகவல்களைத் தெரியப்படுத்துவதும் சமகாலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரினதும் கடமையாகின்றது. இன்றேல் எம் பண்பாட்டு



CamScanner

பாரம்பரியங்கள், கலாச்சாரங்கள் காலத்தோடு அள்ளுண்டு மறைந்தொழிந்து வேறொரு உலகிலே வாழவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுவோம்.

இந்த வகையிலே தமிழர் வாழ்வியல் வட்டத்தை நோக்கும் போது பிறப்பிலிருந்து இறப்புவரை கலைகளின் சங்கமத்தோடு வாழ்வினைத் தொடர்ந்து வருவதைக்காணலாம். மருத்துவிச்சி பாடல் முதல் ஒப்பாரி வரை வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகள், அல்லது சடங்குகள், விளையாட்டுக்கள், தொழில் சார் நிலைகள் போன்றவற்றில் எல்லாம் இந்த கலைவடிவங்கள் ஊடுபாவாகத் தொடர்வது தெரிந்ததே. இவற்றிலும் பாடல்களே வாழ்வோடு பின்னிப்பிணைந்திருப்பதைக் காணமுடிகின்றது. தமிழ்ப்பண்பாட்டிலே ஒவ்வொரு நிகழ்வையும் மனிதன் பாடலுடனேயே கழித்திருந்தான். பாடலோடு கூடித் தனக்குரிய பண்பாட்டு வழக்கங்களை நிறைவுசெய்து வந்தான் என்பது வரலாறு.

இந்நிலையில் ஆய்வின் மட்டுப்பாடுகள் கருதி வாழ்வின் ஆரம்பப்புள்ளியாக இருக்கும் பிறப்பை அடியொற்றித் தாலாட்டுப்பாடலையும், நிறைவுப்புள்ளியாகத்திகழும் இறப்பை அடியொற்றி ஒப்பாரிப்பாடலையும் இவ்வாய்வு தனக்குரிய பரப்பாக எல்லைப்படுத்தி நிற்கின்றது.

## தாலாட்டுப்பாடல் - ஓர் அறிமுகம்

தாலாட்டு எனப்படுவது குழந்தையின் அமைதிக்காகவும் நித்திரையாக்குவதற்கமாகப் பரம்பரை பரம்பரையாகப் பாடப்பட்டு வரும் வாய்மொழிப்பாடல்கள் ஆகும். இவை எல்லாச் சமூகத்தினராலும் தத்தம் பண்பாட்டுக்கேற்பப் பாடப்பட்டு வருகின்றன. காட்டு வெள்ளம்போல வரும் தாயின் மனஎழுச்சிக்கேற்ப இப்பாடல்கள் வடிவம் பெறும். தமிழ்கூறும் நல்லுலகின் ஆரம்ப காலங்களிலேயே இந்த வகை மனஎழுச்சிப்பாடல்களை இனங்கண்டுகொண்ட ஆழ்வார்கள், பிற்கால கவிஞர்களும் கூட இவ்வகைப்பாடல்களுக்கு மெருகேற்றி பிள்ளைத்தமிழாகவும், தேவர் தேவியர் தாலாட்டுக்களாகவும் யாப்பிலக்கணக்கட்டுக்கோப்பில் அடக்கிப் பாடல்களை இயற்றியுள்ளனர். இவை தெய்வத்தாலாட்டுக்களாயின.

எடுத்துக்காட்டாக, பிள்ளைத்தமிழ் பிரபந்தங்களிலே வரும் பத்துப்பருவங்களிலே காப்பு, செங்கீரை முதலிய பருவங்களைத் தொடர்ந்து வருவது 'தாலப்பருவம்' ஆகும். குழந்தையைத் தொட்டிலிலிட்டு அதன் சிறப்புக்கள் முழுவதையும் தொகுத்துத் தாலாட்டும் பருவமே பிள்ளைத்தமிழின் தாலப்பருவம் ஆகும். இந்தத் தாலப்பருவப் பாடல்கள் 'தாலேலோ' என முடிவுறும் தன்மையுடையன. இதுவே உலக நடைமுறையிலும் வழக்காக உள்ளது.3

தாலாட்டு என்பது தால் + ஆட்டு, தாலு + ஆட்டு என்றும் இரு சொற்களினால் ஆக்கம் பெற்றது. 'தாலு' என்பது நாக்கைக்குறிக்கும் வடமொழிப்பதம். தால் என்கின்ற நாக்கினால் ஒசை எழுப்பி குழந்தையைத் தூங்க வைக்கும் பாடல்களே தாலாட்டுப்பாடல்களாகும். 'லுலுலுலுலு……லாயி' என நாக்கினை சுழற்றிப் பாடியது தான் முதல் தாலு ஆட்டு எனப்படுகின்றது. அதாவது நாக்கை சுற்றி ஆட்டிப்பாடி ஒருவகை ஒலியை எழுப்பித் தூங்கச் செய்வது ஆகும். இது மட்டுமல்லாமல் 'ஆராரோ ஆரிவரோ, ராராரோ ராரிரரோ' என்பன போன்ற ஒலித்தொடர்களை இசையமைத்து வாய்ப்பாடாகப்பாடி இசைப்பதாயும் அமையக்காணலாம்.



CamScanner

குழந்தையும் தாலாட்டும்.

குழந்தை முதன்முதலில் புலனாகும் உணர்வுகளிற் கூர்மையானதும்,ஆழமானதும், குறிப்பானதும் செவியுணர்வே. நாம் பார்ப்பவை கேட்பவை அனைத்தும் மூளையிலே பதியமிட்டப்படுவது இயற்கை. எனினும் குழந்தைப்பருவத்திலே அதுவும் பாதி உறக்கத்திலே கேட்கும் கருத்துக்கள் ஆழமாக மனதிலே பதியும் தன்மைவாய்ந்தவை என்பது உளவியலாளர்களின் கருத்து. 4

தாயையும் பிறரையும் அவரவர் குரலை அடிப்படையாகக் கொண்டே குழந்தை வேறுபடுத்தி உணர்கின்றது. இதனால்தான் குழந்தையின் கவனத்தைத்திருப்பி ஒருநிலைப்படுத்தி அழுகையை நிறுத்த விரும்புவோர் குரலைப்பயன்படுத்தி இருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. எனவே தாலாட்டின் ஆரம்ப நிலை பொதுவாக ஒலி எழுப்புவதாகவே அமைந்திருக்கலாமெனக் கருத இடமுண்டு.

தாலாட்டுப்பாடல்களின் முக்கிய நோக்கம் குழந்தையின் அழுகையை ஆற்றித்தூங்கச்செய்வது ஆகும்.

‘ஆராஆரா ஆரிவரோ
அரிவரோ ஆராரோ
ஆரடிச்சு நீயழுதாய்
கன்மணியே கண்ணுறங்கு
ஆராரோ ஆரிவரொவ
ஆரிவரோ ஆராரோ..’

இது பொதுவான தாலாட்டுப்பாடல் வரிகள். இதனைத்தொடர்ந்து தாயானவள் தன் கற்பனைக்கேற்பத் தொடருவாள். ஆனால் இந்த சொற்றொடரிலே வாழ்வியல் தத்துவமே பொதிந்திருக்கின்றது என்று தத்துவவாதிகள் கூறுவார்கள். அதாவது நாம் போனபிறப்பில் யார்யாரோ, அடுத்தபிறப்பிலும் நான் யாரோ நீயாரோ, ஆனால் இந்தப்பிறப்பிலே நீ குழந்தையாகவும் நான் உன்னைச் சீராட்டும் தாயாகவும் இப்பூவுலகிலே வந்து சேர்ந்திருக்கின்றோம் என்பது போலப்புலப்படுகின்றது. இந்த உலக வாழ்வின் தத்துவத்தின் அடிப்படைக் பொருளின் வழி தான் பாடலின் அடுத்த வரிகள் தொடரப்படுகின்றன.

பண்பாட்டுக்கழஞ்சியமாகத் தாலாட்டுப்பாடல்கள்

இந்த தாலாட்டுப்பாடல் என்கின்ற பொக்கிசம் பேசுகின்ற உள்ளடக்கங்கள் பற்றி பலவாறாக நோக்கமுடியும்.

போற்றிப்பாடுதல் :

தாயானவள் உலகில் கிடைத்தற்கரிய உன்னத பொருட்களுக்கு தனது குழந்தையை உவமித்துப் பாடுவதான வழக்கங்கள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக இந்தப்பாடலில் குழந்தையை முத்தாக கற்பனை செய்து தாயானவள் பாடுகின்றாள்.



CamScanner

'முத்தான முத்தோ- நீ
முதுகடலின் ஆணிமுத்தோ
ஈனாத முத்தோ.....'
'சாதிப்பெருங்கடலில்- நீ
சங்கீன்ற முத்தோ...'5

எனப்பலவாறாக பாடுவாள் தாய். முத்தின் இளமை, தன்மை, தூய்மை, ஒளி ஆகியவற்றோடு ஒப்புநோக்கிக் குழந்தையை முத்தாக உருவகித்துப் பாடுவதாயிற்று. 'சாதிப்பெருங்கடலில் சங்கீன்ற வெண்முத்தோ...' என்று புகழும் தாய் 'ஈனாத முத்தோ..'என்ற தொடர் மூலம் குழந்தைக்குத் தெய்வீகத்தன்மையும் கற்பித்துவிடுகின்றாள்.

இவை தவிர 'கண்டு' (கன்று என்னும் பதம் பேச்சுவழக்கில் கண்டு என்று வழங்குவதாயிற்று), குயில், வெள்ளி, குலக்கொழுந்து, பலா, சிலம்பு, பூச்சரம் எனப்பலவாறும் தாய் தன் குழந்தையை சிறப்பியல்பு செய்து பாடுவது பாடல்கள்வழி கண்கூடு.

**உறவுக்காரர் அறிமுகம்.**

குழந்தைக்கு அதனது உறவுகள் பற்றிய அறிவை ஊட்டுவதாக இப்பாடல்கள் அமைகின்றன. எந்த ஒரு குழந்தைக்கும் அதன் உறவினர்களை அறிமுகம் செய்து வைப்பவளாகத் தாய் செயற்படுகின்றாள். தந்தையைக்கூட தாயே குழந்தைக்கு அறிமுகம் செய்யவேண்டியவளாகின்றாள். இது தாய் என்கின்ற உறவின் தனித்தன்மை. உறவின் முறை, இவர்கள் பெருமை எனப்பல விடயங்கள் இங்கு பேசப்படுகின்றன. ஒரு உறவுப்பாலமாக இந்தத்தாலாட்டுப்பாடல்கள் சமூகத்தில் அங்கம் வகித்திருக்கின்றன.

குழந்தைக்கு தாயானவள் தான் தந்தையையும் ஏனைய உறவினர்களையும் அவரவர் பண்புகளோடு தாலாட்டுப்பாடல்வாயிலாக அறிமுகப்படுத்தும் வழக்கமும் வழிவழியாகக் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக,

'மாமன் அடிச்சானோ மாதாளங் கம்பாலே
அண்ணன் அடிச்சானோ ஆவாரங் கொப்பாலே
மாமி அடிச்சாளோ மல்லிகைப் பூச் செண்டாலே
பாட்டி அடிச்சாளோ பால்வார்க்கும் செம்பாலே
ஆச்சி அடிச்சாளோ அமுதூட்டும் கையாலே
மாமி அடிச்சாளோ மைதீட்டும் கையாலே
அடிச்சாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணிவைப்போம்'
'ஆண் பனையின் நொங்கே அணில் கோதா மாம்பழமே
கூப்பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்'6

இந்தப்பாடல்வரிகள் குழந்தையையும் உறவினரையும் தொடர்புபடுத்துவதாகவும், அடித்தவர்களுக்குத தண்டமைகள் வழங்குவதான வாழ்வியல் சிந்தனைகளை



CamScanner

எடுத்துக்கூறுவதாகவும்,தாய் குழந்தைக்குத தன் ஆதரவை உறுதி செய்து கொள்வதாகவும் (கடைசி வரி) அமைகின்றது.

**கல்வியின் சிறப்பினை குழந்தைக்கு கூறல்:**

குழந்தையாக இருக்கும் போதே வருங்காலத்திலே கல்வியில் இக்குழந்தை சிறக்க எண்ணி தாயானவள் தன் குழந்தை சமூகத்திலே மந்தியிருக்கக் கற்பனை செய்து அதற்கான அடிப்படையான கல்வியின் சிறப்பினை தாலாட்டிலே எடுத்துக்கூறிப்பாடுவாள்.

‘நீட்டோலை வாசிக்கத் தம்பிக்கு
நெடுங்குருத்து வெள்ளோலை
வெள்ளோலை வாசிக்கத் தம்பி வெள்ளாளர் பிள்ளையல்லோ
வண்டுப் பனையோலை வார்த்தெடுத்த நல்லோலை
கண்டுப்பனையோலை
தம்பிக்குக் கணக்கெழுத நல்லோலை’7

ஆரம்ப காலங்களிலே கற்பதற்குப்பனையோலை பயன்படுத்தப்பட்டமை பற்றியும் இவற்றில் படிப்பதற்குரிய நல்லோலை பற்றியும் இந்தத்தாலாட்டிலே எடுத்துரைக்கக் காணமுடிகின்றது.

**தாலாட்டுப்பாடல்களும் வழிபாட்டுச்சடங்குமுறைகள்.**

ஓவ்வொருதாய்க்கும் குழந்தைப்பேறு என்பது இறைவனால் அவளுக்குக்கிடைக்கப் பெற்றவரம். அந்த வரத்தைப் பெறுவதற்காக எவ்வளவு நோன்பிருந்தார் என்பதையும் அக்காலங்களிலே தான் பெற்ற அனுபவங்களையும் இந்தத் தாலாட்டிலே பகிர்ந்து கொள்வதை அங்கங்கே காணமுடியும்.

‘பிள்ளை வரம் வேணுமென்று
நாங்க கதிரமலை போகயிலே
கதிரமலைச்சாமிவந்து பிள்ளைக்கலி தீர்த்தாரோ..’

‘விளக்கிலிட்ட நெய்போல வெந்துருகி நிற்கயிலே
கதிரமலைச்சாமி வந்து எங்கட கண்கலக்கம் தீர்த்தாரோ..’8

போன்ற அடிகள் தகுந்த சான்றாக அமைகின்றன.

‘என்னைக் கலிதீர்த்தே உலகில் ஏற்றம் புரிய வந்தாய்’ என்று பாரதி கண்ணம்மாவைப் பார்த்து வியந்து நிற்பதுவும் இதந்தத் தாலாட்டுப்பாடலின் பாதிப்பு என்றுகூடக் கூறமுடியும்.

இது போல குழந்தையைப் பார்த்து தாயானவன் ‘மாயவனார் தந்த பிச்சை.ஈசுவரனார் தந்த பிச்சை, கார்த்திகையாய்ப் பூத்தாயோ, பெருமகனார் திருமுடியோ..’ என்றவாறு பலவாறாக தெய்வத்தன்மை கொடுத்து விழித்து அழைப்பதாகவும் பாடல்கள் பல காணக்கிடக்கின்றன.

மேலும் சில தாலாட்டுப்பாடல்களிலே தாய் செய்த தவங்கள் பற்றியும் விபரிக்கக் காணமுடிகின்றது.

‘வெள்ளி மெழுகி – நான் வெகுநாள் தவமிருந்து
சனி மெழுகிச் சாதம் வைச்சு-
நான் சந்திரனைக் கைதொழுது
எழும்பு நுழையாத ஈசுவரனார் கோயிலிலே-
தலையாலே நடந்து நான் தவசுகளோ செய்து வந்தேன்
தவசு செய்து பெத்தெடுத்த- என் செல்வக்கொழுந்தே’

‘ஸ்ரீரங்கம் ஆடி நான் சிவனோட வாதாடி
தனித்தீர்த்தம் ஆடி நான் தவசு பண்ணிவேண்டினேன்’

‘அள்ளி மிளகு திண்டு அமாவாசை நோன்பிருந்து
வேத்திலையைத் திணிடால் விரதம் அழிஞ்சு போகுமெண்டு
குங்குமத்தைத் திண்டல்லவோ கும்பிட்டேன் கோயிலெல்லாம்
கும்பிட்டு நிக்கயிலே குதித்தோடி வந்த செல்வம்’9

இந்தப்பாடல் அடிகள் பல கருத்துக்களை வெளிப்படுத்துவனவாக இருக்கின்றன. தவம் பற்றிய வர்ணனை, தாய் பூசித்த தெய்வங்கள், நேர்த்திக்கடன்கள், நெறிமுறைகள், பெற்ற அனுபவம் எனப்பலவாறும் குறிப்பிட்டு நிற்கக்காணமுடிகின்றது. இவற்றுக்கப்பால் அவ்வப்பாடல்கள் தோன்றுகின்ற சமூக பண்பாட்டு நெறிமுறைகள், வழக்கடிபாடுகள்,சமய நம்பிக்கைகள் போன்ற பல சமூகப்பரிமாணங்களும் இங்கு வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

**சமூகத்தில் வழக்கிலிருக்கும் புராண இதிகாசக்கதைகளை எடுத்துரைத்தல் :**

இது மட்டுமல்லாது தாய் தன் சமூகவிழுமியங்களுக்கு ஏற்பத் தனக்குத் தெரிந்த இதிகாச புராணங்களில் போற்றப்படும் உத்தம புருஸர்களுடன் தன்குழந்தையைத் தொடர்புபடுத்திப் பாடக்காணலாம். குழந்தை தான் வாழப்போகும் சமூகத்தின் பண்பாடு, கலாசாரம் போன்ற விழுமியங்கள் கட்டுப்பாடுகளைச் சிறுபருவத்திலிருந்தே செவிகளிலே வாங்கிப் புலன்களிலே வேரூன்றி சிறந்ததொரு சமூக இசைவாக்கம் மிக்க குழந்தையாக வளருவதற்கு இது வாய்ப்பாக அமைகின்றது.

‘ஆரார் திருமகனோ- நீ ஆதிசிவன் தன் மகனோ
பிள்ளைக்கலி தீர்க்க வந்த பெருமகன் திருமகனோ...’10

போன்ற பாடல்அடிகள் புலப்படுத்திக்காட்டுகின்றன. இவ்வாறு குழந்தையை லவகுச, அபிமன்னன், இராமன், முருகன் என்றெல்லாம் உருவகித்துப்பாடும் பாடல்களை வழக்கிலே காணமுடிகின்றது.

இந்த அடிகள் அச்சமூகத்தின் ஐதீக வழக்குகளையும் புராண இதிகாச கதைகளையும் அவை பற்றிய நம்பிக்கைகளையும் எடுத்தியம்புவனவாய்



CamScanner

அமைகின்றன.எனவே ஒவ்வொரு சமூகத்தினதும் தாலாட்டுப்பாடல்களின் வழி அச்சமூகம் தொடர்பான பாரம்பரியங்களை எவரும் எளிதில் அறிந்து விட வாய்பேற்படுகின்றது.

தாலாட்டு என்பது குழந்தையைப் பெருமைப்படுத்திப் பாடப்படுவது என்பது தவிர குழந்தையின் அழுகையை ஆற்றும் வகையிலும் பாடப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. தாலாட்டுப்பாடல்களின் முக்கியநோக்கம் குழந்தையைத் தூங்க வைப்பது தான். அழும் குழந்தையை ஆற்றிக்கண்ணயரவைப்பதற்காகவே பாடப்படுவது. இந்தவகையில்,

தாலாட்டும்போது 'ஆர் வெம்பிறது,'ஆர் அழுகிறது'
என வினவும் பாணியிலும்,

'மானோ அழுகிறது என் மாங்குயிலோ வெம்பிறது
அரசோ அழுகிறது என் அம்புலியோ வெம்பிறது…'11

போன்ற பாடல் வரிகள் சிறந்த உதாரணம்.

இதை விட குழந்தையை முன் உருவகித்த சொற்களால் உவமித்து 'அழவேண்டாம்','வெம்பவெண்டாம்' எனத் தேற்றுவதாயும் சில பாடல்கள் அமைகின்றன.

'அரசே அழவேண்டாம்- என்
அம்புலியே அழவேண்டாம்
தேனே அழவேண்டாம்-என்
தெள்ளமுதே வெம்பவேண்டாம்…'12

என்றவாறான பாடல்வரிகள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன.

இவற்றைவிட குழந்தை அழுகின்ற விதத்தை ரசித்து வர்ணித்துப்பாடுவதாகவும் சில பாடல்கள் அமையும்.

'சீறி அழுவானேன் சிறு கண்ணால் நீர்வார
வெம்பி அழுவானேன்- பொன்னான வாய்நோக
கதறி அழுவானேன் - கத்தரிப்பூ வாய்நோக
வெம்பி அழுவானேன் - வெள்ளரிப்பூ வாய்நோக'…13

போன்ற பாடல் அடிகளில் குழந்தை அழும் விதத்தை உவமை உருவகங்களோடு வர்ணிக்கும் தன்மையைக்காணலாம். குழந்தையினுடைய வாய்ப்பகுதியை பொன், கத்தரிப்பூ, வெள்ளரிப்பூ போன்றவற்றோடு உவமிக்கும் தன்மையை இங்கு காணமுடிகின்றது. மழலை அழுகையைப் பலவாறாகத்தாய் ரசித்துப்பாடுவதாக அமைகின்றது.

**பிறந்த வீட்டின் பெருமை பேசுதல்:**

'பிறந்த வீட்டின் பெருமை பேசவது பெண்ணினத்தின் இயல்பு' இந்த ஒரு எடுகோளினை மெய்ப்பிப்பதாக தாலாட்டுப்பாடல்கள் அமைந்திருக்கக் காணலாம்.



CamScanner

எவ்வாறு குழந்தைக்குத் தன் உதிரத்தைக்கறந்து ஊட்டி வீரம் சேர்க்கின்றாளோ அவ்வாறே குழந்தை செவியிலே விழும் வண்ணம் பெருமை பாடி குழந்தையை தாய் ஆற்றுப்படுத்துகிறாள்.

'அஞ்சுதலை நாகம் அடைகாக்கும் தாழையிலே
அஞ்சாமல் பூவெடுக்கும் அருச்சுனனார் உன் தகப்பன்.'

'சந்திரரோ உன் மாமன் சூரியரோ உன் தகப்பன்
வெற்றியோ உன் மாமன் வேந்தரோ உன்தகப்பன்'[14]

போன்ற அடிகள் குழந்தையினுடைய உறவுகள் பற்றிப் பெருமைபடப் பேசுவதாயும் இப்பாடல்களில் சில அமைகின்றன.

**தொட்டில் செய்தல்:**

தாலாட்டு என்று சொல்லும் போது குழந்தை கண்ணயரச் செய்வதற்காகத் தொட்டிலில் இட்டு தாலாட்டுப்பாடி தூங்கவைப்பது வழக்கம். தொட்டில் இங்கு குழந்தைக்குரிய பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. தாலாட்டுப்பாடல்களில் தொட்டில் வருணனை மிக இன்றியமையாததாக காணப்படுகின்றது. பொதுவாக உலக நாடுகளிலுள்ள தாலாட்டுப்பாடல்களிலே தொட்டில் வருணனை மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. அதனால்தான் என்னவோ இந்தத் தாலாட்டுப்பால்கள் தொட்டில் பாடல்கள் எனவும்,Cradle song என்றும் அழைக்கப்படுவது வழக்கமாயிற்று.இந்த குழந்தையின் தொட்டில் ஊஞ்சலாவும் ஆங்காங்கு எடுத்தியம்பப்படுகிறது.

'பச்சை இலுப்பைவெட்டி
பால்வடியத் தொட்டில் கட்டி,
தொட்டிலுமோ பொன்னால
தொடுகயிறோ முத்தால
முத்தென்ற முத்தோ நீ
முதுகடலில் ஆணிமுத்தோ'[15]

'ஆடுகின்ற தொட்டிலுக்கு
ஆர்க்கின்ற மணிச்சரங்கள் கட்டிடுவேன்..'

போன்ற வரிகளில் தொட்டில் வர்ணனை மிக அழகாக வர்ணிக்கப்படுகின்றது.

இத தவிர 'ஏணை' எனப்படும் சேலையால் கட்டப்பட்ட தூளியிலும் குழந்தை கண்ணயர்வதற்காக கிடத்தப்படுவதை காணமுடிகிறது.

'மாணிக்கக் கால் நாட்டி
வச்சிர வடம் பூட்டி
ஆணிப்பொன் தொட்டிலிலே
அருமருந்தே நித்திரைசெய்' என்கின்ற அடிகள் சிறந்த எடுத்துக்காட்டு.



CamScanner

இது தவிர குழந்தைக்குப் பயன்படு பொருட்களும் இங்கு விளக்கமாக எடுத்தியம்பப்படும். பச்சிளம் குழந்தையாக இருக்கும் போது பயன்படுவதாயும், பின்பு குழந்தை தவழும் போதும் தளர் நடை நடக்கும் போதும் வீதியிலே இனிவரும் காலங்களிலே விளையாடும் போதும் பயன்படுத்தப்படும் விளையாட்டு உபகரணங்களே இவர்களது சொத்து. இதுபற்றி எல்லாம் இந்தப்படல்களிலே குறித்து நிற்கக் காணலாம்.

'சங்கினால் பால்கொடுத்தால்
சந்தனவாய் நோகமென்று
தங்கத்தினால் சங்குசெய்து
தருவார்கள் தாய்மாமன்'...

பாற்சங்கு இங்கு முக்கியம் பெறுகின்றது.

'தங்கத்தால் அருணாக்கொடி
தம்பிக்குக் கைவரிய மோதிரமும்
கொண்டுவந்தார் தாய்மாமன்
மருமகனைப் பாப்பமெண்டு...'

'சின்னஞ்சிறு விரலுக்கு
சித்திரம் போல மோதிரங்கள்
பாட்டனார் கொண்டுவந்தார்
பசுங்கிளியைப் பாப்பமெண்டு...'[17]

இங்கு குழந்தையினுடைய சொத்துக்கள் பற்றிப்பேசப்படுகின்றன. இவற்றைக் குழந்தைக்கு யார்யாரெல்லாம் கொடுக்கவேண்டும் என்பன போன்ற சமூக வழக்கமுறைகள்பற்றிக் குறிப்பிடப்படுவதை இங்கு காணமுடிகின்றது.

**ஒப்பாரி : அறிமுகம்**

ஒருவனது வாழ்வின் தொடக்க காலத்தில் பாடுவது தாலாட்டு, அவன் வாழ்க்கை முடிந்து போகையிலே பாடப்படுவது ஒப்பாரி ஆகும். எவரேனும் இறந்து விட்டால் ஒருவருடைய உள்ளத்தில் எழுகின்ற துன்ப உணர்வை வெளிக்காட்ட ஒப்பாரி பாடப்படுகின்றது. இறந்தவர்களது வரலாறு தெரியாதவர்கள் இப்பாடல் மூலம் வரலாற்றினைத் தெரிந்துகொள்ளமுடியும்.

ஒப்பாரியைத்தமிழில் பிலாக்கனம், பிணக்கனம், கையறுநிலை, புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு எனப் பல பெயர்கள் கொண்டு குறிப்பிடுகின்றனர் என்று ச. சண்முகசுந்தரம் அவர்கள் சுட்டிகாட்டுகின்றார்.[18]

ஒப்பாரியை ஒப்பு+ ஆரி என்று பிரித்து அழுகைப்பாட்டு என சென்னைப்பல்கலைக்கழகத் தமிழகராதி பொருள் தருகிறது.

ஒப்பாரிப் பாடலும் தாலாட்டுப்பாடல்போல பெண்களுக்கான பாடல் வகைக்குள் அடங்கும். தாலாட்டுப்பாடல்களின் பண்புகள் பல ஒப்பாரிப்பாடல்களோடு தொடர்டையனவாக இருக்கக் காணலாம். எழுத்தறிவற்ற, படிப்பு வாசனையற்ற பெண்கள்

தமது உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு களமாகச் சாவீட்டினைப்பயன்படுத்திக் கொள்கின்றனர்.[19] எமது பண்பாட்டிலே 'சொல்லி அழுதல்','சொல்லி அழ ஆளில்லை' முதலான தொடர்கள் கிராமிய மட்டத்திலே வழங்கி வருவதையும் அவதானிக்கலாம். ஒப்பாரிப் பாடல்களும் ' சொல்லி அழுதல்' என்ற வகைக்குள் அடங்கும் என்று பேராசிரியர் சிவலிங்கராசா அவர்கள் தனது கட்டுரையிலே குறிப்பிட்டு நிற்பதைக்காணமுடிகின்றது.[20]

இந்த ஒப்பாரிப்பாடல்களின் ஆரம்பச்சுவடுகளை நாம் தமிழ்க்காப்பியங்களிலும் புராணங்களிலும் கூடக்கண்டுகொள்ளமுடிகின்றது. கம்பராமாயணத்தின் யுத்தகாண்டத்திலும், அரிச்சந்திர புராணத்தில் சந்திரமதி புலம்பல், மண்டோதரி புலம்பல், தசரதன் புலம்பல் என இன்னும் பல இலக்கியப்பதிவுகளிலும் கண்டுகொள்ளமுடிகின்றது.

ஆனால் இன்று ஒப்பாரி சொல்லி அழுதல் சமூகத்திலே மறுக்கப்பட்ட செயற்பாடாகக் கருதப்பட்டு புறம்தள்ளப்பட்ட ஒரு கலை வடிவமாக மாற்றம்பெற்றுவிட்டது. ஆனால் ஒரு காலத்திலே பிரிவாற்றாமைபோக்கும் உளமருந்தாக இந்த ஒப்பாரிப்பாடல்கள் சமூகத்திலே கைக்கொள்ளப்பட்டு வந்தது. இந்நிலையிலே மீளவும் இத்தகைய பாடல்கள் பற்றிய பதிவுகளை மீட்டுப்பார்ப்பதன் மூலமாகத்தமிழ்ப்பண்பாட்டின் வழக்கங்களையும் பண்பாடு கலாசாரங்களையும் மீள்பதிவு செய்துகொள்ளமுடியும்.

**ஒப்பாரிப் பாடப்படுகின்ற சந்தர்ப்பம்:**

இறப்பு வீட்டிலே உரித்துடையவர்கள் சேர்ந்து இறந்தவர்கள் பற்றியும், அவர்களது செயற்பாடுகள் பற்றியும், மற்றும் பாடல் பாடப்படுகின்ற சமூக நிகழ்வுகளை உள்ளடக்கியதாக அமையும். இதுவும் தாலாட்டுப்பாடலும் பல ஒத்த பண்புகளுடையவை. குழந்தையைத் தூங்க வைப்பது தாலாட்டு, வாழ்க்கையிலே நிரந்தரத்தூக்கத்தில் சென்றோர்க்காகப் பாடப்படுவது ஒப்பாரி. ஆதலால் தாலாட்டு, வாழ்வியலோடும் ஒப்பாரி, சடங்குகளோடும் தொடர்புபட்டனவாகக் கருதமுடிகின்றது.

**ஒப்பாரிப்பாடல்களின் உள்ளடக்கம்:**

ஒப்பாரிப்பாடல்களும் உறவு முறை பற்றியவையாகவும், பொருளாதாரப் பண்புகொண்டவையாகவும், சமூக விழுமியங்களைப் புலப்படுத்துவதாகவுமாக மூன்று வகையாக வகுத்துக்கொள்ளலாம். ஒப்பாரிப்பாடல்களில் வெளியிடப்பட்டுள்ள உணர்ச்சிகள் இறந்தவரின் வயது, பால், சாதி ஆகியவற்றையும் ஒப்பாரி பாடுவோருக்கு இறந்தவர் என்ன முறையில் உறவு என்பதையும் பொறுத்து வேறுபடும்.[21]

'பாயிற் படுக்கவில்லை - இன்னும்
பத்து நாட் செல்லவில்லை
காய்ச்சலாய்ப் போட்டு - இன்னும்
கன நாளோ ஆகவில்லை

வீசக்கடதாசி – உனக்கு
விசையுடனே வந்ததென்ன



CamScanner

மாயக்கடுதாசி – உனக்கு
மடிமேல் விழுந்ததென்ன'..[22]

மேலும்,

'முத்துப்பதித்த முகம்
என்ரை ராசா நீ
முழு நிலவாய் நின்ற முகம்
நினைப்பேன் திடுத்திடுவேன்
என்ரை ராசா உன்ரை
நினைவு வந்த நேரடெல்லாம்
போகக் கால ஏவினதோ என்ரை ராசா
இந்தப் பொல்லாதாள் தன்னை விட்டு
நாக்குப்படைச்சவையள் இனி நாகரிகம் பேசுவினம்
மூக்கும்படைச்சவையள்
முழுவியளம் பேசுவினம்
மூளி அலங்காரி
முழுவியளம் பேசுவினம் - இவள்
மூதேசி என்பினமே'..

கணவனின் இழப்பினிலே புலம்புவதும் என சமூக நடைமுறைகளை விழித்தவாறான ஒப்பாரிப்பாடல்கள் சிறந்த எடுத்துக்காட்டுக்கள்.

**முடிவுரை**

எனவே மேற்படி தரவுகளின் படி நோக்கும் போது தாலாட்டு மற்றும் ஒப்பாரிப்பாடல்கள் சிறந்த இலக்கியம் என்பதனை விட அச்சமூகத்தின் கண்ணாடி என்றே சொல்லிவிட முடியும். ஒருவனது பிறப்பிலும் இறப்பிலும் செவிமடுக்கும் பாடல்கள் என்கின்ற வகையிலும் சரி, அனைத்து சமூகப்பரிமாணங்களையும் இப்பாடல்வகையூடாக தெற்றென கண்டுகொள்வதிலும்சரி சமூகத்தின் பூரணமான ஒரு விம்பத்தினை இந்தப் பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இதன் வழி தன் சமூகம் சார் விழுமியங்களையும் நெறிமுறைகளையும் தான் சார்ந்து கற்றுக்கொள்ளவும், சூழலையும் உறவுகளையும் இனங்கண்டு பரீட்சயப்படுத்திக் கொள்ளவும் ஒரு சிறந்த சந்தர்ப்பத்தினை இப்பாடல் வடிவங்கள் வாய்ப்பளிக்கின்றது.

சமூகத்தை இலகுவாகப் புரிந்து கொள்வதற்குரிய சாதனங்களாக அமைகின்ற இவ்வாறான கலை வடிவங்கள் பேணப்படுமேயானால் அந்நியப்பட்டுக்கொண்டிருக்கின்ற தமிழ் சமூகத்தினை அதன் பண்பாட்டுச் சிதைவிலிருந்து காத்துக்கொள்ள வகை கிடைக்கும்.

குறிப்பாக நோக்கும்போது இவ்வகைப்பாடல்கள் தமது நோக்கங்களைப் பூர்த்தி செய்தல் என்பதற்கு அப்பால் தமிழர் தம் மரபின் அடையாளங்களாக வைத்தெண்ணப்படவேண்டியவை. பண்பாட்டு நெறிமுறைகள், வழக்காறுகள்,



CS CamScanner

பழக்கவழக்கங்கள், மொழி, தனித்துவங்கள் போன்ற பல சமூகக்குழுமத்திற்கான வேர்களைத் தம்முள் கொண்டவை. ஒரு சமூகத்தின் தனித்துவம், பண்பாடு என்பன அதனது மண்ணிலிருந்து எழுகின்ற கலைவடிவங்களாலேயே வெளிப்படுக்கப்படுகின்றது. இந்தக்கலை வடிவங்களே இச் சமூக மூலக்கூறுகளைக் காத்துக் கொள்ளவும் அடுத்த சந்ததிக்குக் கையளிக்கக்கூடிய ஆற்றலும் உடையவை.

இன்றைய சமகாலநிலை ஓட்டத்திலே நோக்கும் பொழுது இவ்வகை கிராமியஇசை மரபுகள்மருவி விட்ட ஒருவகைப்பாடல் வடிவமாகி விட்டது. கம்பியூட்டர் உலகத்திலே பறந்துகொண்டிருக்கும் சமூகத்திலே வாழுகின்ற பெண்களுக்குக் குழந்தைகளைத் தாலாட்டிப் பாலூட்டி சீராட்டுவதற்குப் போதியளவு அவகாசம் கிடைப்பதில்லை.ஒருவனது இறப்புச் சடங்குகளைப் பொறுமையாக ஆசார முறைகளுடன் பூரணமாகச் செயற்படுத்துவதற்குரிய அவகாசம் கிடைப்பதில்லை. பெண்கள் அன்னிய மோகத்தால் வேறு பாடல்களை வாயில் முணுமுணுத்தவாறு குழந்தைகளை நித்திரையாக்குகின்றனர். அது'பாஸன்' ஆகிப்போய்விட்டது. இறப்பு வீடுகளிலே வாய்விட்டு அழுதல் என்பது தற்கால சமூகத்திலே ஏற்புநிலை மறுக்கப்பட்ட விடயமாகக் கொள்ளப்படுகிறது.

ஆக.இந்த நிலை மாற்றம் பெறவேண்டும். இத்துணை சமூக பண்பாட்டு அடையாளமாகத்திகழும் இவைபோன்ற கலை வடிவங்களைப் பேணிக்காக்கவேண்டியது எம் கடமை.

பாடசாலைமட்டத்திலும், பல்கலைக்கழக மட்டத்திலும் இதற்கான தேடல்களும் பயன்பாடுகளும் விருத்தி செய்துகொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

தேடல்கள் ஆய்வு முயற்சிகளினூடாக முன்னெடுக்கப்பட்டு சமூகத்திற்கு சமர்ப்பணம் செய்யப்படவேண்டும்.

சமூகத்திலே பயன்படு நிலைகளிலுள்ள இவ்வகைப்பாடல்களை இனங்கண்டு ஆவணப்படுத்தலும்,அவற்றை உரியவகையிலே பாதுகாத்தலுமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்

எமது கையில் இருக்கக்கூடிய சிறந்த வளங்களைக்கைவிட்டு வேற்றுத்தடங்களிலே எம்மைத்தேடுவது மடமையிலும் மடமை. இவற்றைக் காப்பாற்றி சந்ததிக்கும் கையளிப்புச்செய்தோமானால் நாம் எங்கு சென்றாலும் நாமாகவே வாழ்வது உறுதி.

**அடிக்குறிப்புக்கள் :**

1. கலாநிதி .பாலசுந்தரம். இ :ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) ஆய்வும் மதிப்பீடும். மணிமேகலைப்பிரசுரம். 2005 , பக் 5
2. அம்மன்கிளி முருகதாஸ் . இலங்கைத்தமிழரிடையே வாய்மொழி இலக்கியம் . குமரன் புத்தக இல்லம்,2007. பக் : ix
3. சன்முகலிங்கம் .ச. , தமிழ் நாட்டர் வழக்காற்றியல் : இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் : 1995 : பக் :5

4. H.Carpenter and M.Prichard, "The Oxford Companion to children's Literature" (Oxford University Press),1984 . pg : 15
5. கலாநிதி பாலசுந்தரம். இ. ,ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) ஆய்வும் மதிப்பீடும், மணிமேகலைப்பிரசுரம், 2005 , பக் 15
6. மேஅலது : பக் 18
7. செல்வி திருச்சந்திரன் , பெண்களின் வாய்மொழி இலக்கியம் - தாலாட்டு ஒப்பாரி பற்றிய ஒரு சமூகவியல் நோக்கு, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் : 2001, பக் :30
8. மேலது : பக் :34
9. மேலது : பக் :35
10. மேலது : பக் :37
11. கலாநிதி : பாலசுந்தரம்.இ. ,ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) ஆய்வும் மதிப்பீடும், மணிமேகலைப்பிரசுரம், 2005 , பக் 25
12. மேலது : பக் 27
13. மேலது : பக் 28
14. அம்மன்கிளி முருகதாஸ் : இலங்கைத்தமிழரிடையே வாய்மொழி இலக்கியம் , குமரன் புத்தக இல்லம்,2007, பக் : 16
15. மேலது
16. மேலது : பக் : 17
17. மேலது : பக் : 19
18. கலாநிதி : சிவலிங்கராஜா.எஸ் : யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள் : குமரன் புத்தக இல்லம் : 2003 : பக் 36
19. மேலது 2ழைபர8ல9கதமஅ : பக் 36
20. மேலது: பக் 36
21. செல்வி திருச்சந்திரன் : பெண்களின் வாய்மொழி இலக்கியம் - தாலாட்டு ஒப்பாரி பற்றிய ஒரு சமூகவியல் நோக்கு, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் : 2001, பக் :71
22. பக் : 72

**உசாத்துணை:**

1) கலாநிதி இ. பாலசுந்தரம்,ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்)ஆய்வும் மதிப்பீடும்,மணிமேகலைப்பிரசுரம், 2005
2) முனைவர் இரா.ஜெகதீசன்,முனைவர் தி.சுரேஸ், தமிழிசை ஆய்வு மாலை.திருநாவுக்கரசு இசை ஆராய்ச்சி மையம் மற்றும் இசைக்கல்வி அறக்கட்டளை வெளியீடு (ஆய்வுக்கருத்தரங்கத் தொகுப்பு), மதுரை – 1, மே 2004.
3) H.Carpenter and M.Prichard, "The Oxford Companion to children's Literature" (Oxford University Press),1984.



CamScanner

4) கலாநிதி எஸ் சிவலிங்கராஜா : யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள் : குமரன் புத்தக இல்லம் :2003

5) கலாநிதி அம்மன்கிளி முரகதாஸ் : இலங்கைத் தமிழரிடையே வாய்மொழி இலக்கியம் : குமரன் புத்தக இல்லம் : 2007

6) தமிழ் நாட்டர் வழக்காற்றியல் : க. சண்முகலிங்கம் : இந்த சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் : 2005

7) செல்வி திருச்செல்வம் : பெண்களின் வாய்மொழி இலக்கியம் : தாலாட்டு ஒப்பாரி பற்றிய சமூகவியல் நோக்கு: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவளம் : 2001

8) ஈழத்து வாழவும் வளமும் : கலாநிதி க. கணபதிப்பள்ளை :பாரி நிலையம் : சென்னை : 1962